DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.202/2022

**prosecution witness: PW-6**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | வெள்ளத்தங்கம் | தொழில் | : சார்பு ஆய்வாளர் |
| த/பெ. | : | இராமர் | வயது | : 36 |
| கிராமம் | : | ஏனாதி | சமயம் | : இந்து |
| தாலுகா | : | முதுகுளத்தூர் | | |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>19.07.2025</u>

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>முதல் விசாரணை :-</u>

1.நான் தற்சமயம் சார்பு ஆய்வாளராக துறைமுகம் காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.ரவிச்சந்திரன் அவர்கள் இறந்துவிட்ட காரணத்தினால் ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் நான் கூடுதல் சாட்சியாக சாட்சியமளிக்க அனுமதி வேண்டி அனுமதியின் பெயரில் சாட்சியமளிக்கிறேன்.

2.கடந்த 19.08.2021-ம் தேதி 17.00 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.இளங்கோவன் அவர்கள் நிலையப் பொறுப்பில் இருந்தபோது நிலையம் ஆஜரான டார்வின் த/பெ காளிதாஸ் என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தை பதிவு செய்து அதன் தன்மைக்கேற்றவாறு நிலையக் குற்ற எண்.178/2021 பிரிவுகள்.294(b), 341, 323, 324 இதச கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார்.

3. புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து இராமேஸ்வரம் நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பித்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும்.

4. பின்பு நகல்களை சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும், இவ்வழக்கை சிறப்பு சார்பு ஆய்வாளர் இளங்கோவன் அவர்களே விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 19.08.2021-ம் தேதி 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் உதயகுமார் மற்றும் கண்ணப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் **பார்வை மகஜர் அ.சா.ஆ.5** ஆகும். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6** ஆகும்.

5. பின்பு சாட்சிகள் டார்வின், சில்வஸ்டர், நந்தக்குமார், உதயகுமார் மற்றும் கண்ணப்பன் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளார்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.07.24 16:47:55 +0530

6. அதன்பின்பு வழக்கின் எதிரியை 21.08.2021ம் –ம் தேதி 10.30 மணியளவில் வேர்கோடு செக்போஸ்ட் அருகில் கைது செய்து நிலையம் கொண்டுவந்து நிலையப்பிணையில் விடுவித்துள்ளார்.

7. பின்னர் இவ்வழக்கை மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் திரு. ரவிச்சந்திரன் எடுத்துக்கொண்டு காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.வினோத் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் No Opinion என்று சான்று பெற்றுள்ளார். அந்த அந்த **விபத்து பதிவேடு அ.சா.ஆ.7** ஆகும்.

8.இறுதியாக தனது விசாரணையை முடித்து எதிரியின் மீது 25.09.2023 ம் தேதி சட்டப்பிரிவுகள். 294(b), 341, 323, 324 இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**</u>

1. அ.சா.1 சார்பு ஆய்வாளர் விசாரணையில் 1 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல 1.30 மணி என்று உள்ளது. அ.சா.1 சார்பு ஆய்வாளர் விசாரணையில் ரவி என்பவர் பாத்திரக்கடையில் முன்பு புகார்தாரரை வழிமறித்ததாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை கனேசன் பைனான்ஸ் முன்பாக வரும்போது வழிமறித்தாக சொல்லியுள்ளார். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடம் 6 ம் நம்பர் லைன்தெரு என்று உள்ளது என்றால் சரியல்ல வரைபடத்தில் 6 ம் நம்பர் லைன் ரோடு என்று உள்ளது. சம்பவ இடத்திற்கு முன்பாக செல்லக்கூடிய ரோடு தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். தனுஷ்கோடி– இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலைக்கு இடது பக்கம் உள்ளது மாந்தோப்பு தெரு உள்ளது என்றால் சரிதான். மாந்தோப்பு 6 ம் லைன் ரோடு உள்ளது. வலது பக்கம் NSK வீதி என்றால் அது பற்றி தெரியாது. NSK வீதி மற்றும் மாந்தோப்பு வீதிக்கு கிழக்குபுறம் வலது பக்கம் துறைமுகம் செல்லும் ரோடு உள்ளது என்றால் சம்பவ இடத்திற்கு வலது புரம் தனுஷ்கோடி–இராமேஸ்வரம் செல்லும் ரோடு உள்ளது. அதற்கு மேற்குபுறம் NSK வீதி உள்ளது என்றால் அதை பற்றி தெரியவில்லை.

2. துறைமுகம் ரோட்டிற்கு மேற்கு புறமாக உள்ள தேவர் சிலை, மருத்துவமனை உள்ள பகுதி தான் 6 ம் நம்பர் வீதி என்றால் சரியல்ல. சார்பு ஆய்வாளர் தனது விசாரணையில் எதிரி அ.சா.1 ன் வாகனத்தின் சாவியை பிடிங்கி சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சார்பு ஆய்வாளரின் விசாரணையில் தங்கச்சிமடத்தில் இருந்து இராமேஸ்வரத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்த போது சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 சார்பு ஆய்வாளரின் விசாரணையில் அவரது உள்ளங்கையில் காயம் ஏற்பட்டது என்று சொல்லவில்லை சரியல்ல. அ.சா.2 சார்பு ஆய்வாளர் விசாரணையில் எதிரியின் கடைக்குள் வைத்து சம்பவம் நடைபெற்றதாக கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.2 தனது விசாரணையில் 1.10 மணிக்கு காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க வந்துவிட்டோம்என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 சார்பு ஆய்வாளர் விசாரணையில் 1.20 மணிக்கு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.07.24 16:48:08 +0530

3. அ.சா.1 தனது போலீசார் வாக்குமூலத்தில் 1.30 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து சென்று அ.சா.1 யிடம் புகார் வாக்குமூலம் பெறப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் சார்பு ஆய்வாளர் முறையாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, சாட்சிகளை முறையாக விசாரிக்காமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.07.24 16:48:13 +0530